# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

************

## ஊடக அறிக்கை

## தேசபந்து டாக்டர் வஜிர சித்ரசேனா அவர்களிடம் பத்மஶ்ரீ விருது கையளிப்பு

2021 நவம்பர் 17 ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான கௌரவ மகிந்த ராஜபக் ஷ அவர்களின் பிரசன்னத்துடன், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே அவர்களால் டாக்டர் வஜிர சித்ரசேனா அவர்களுக்கான பத்மஶ்ரீ விருது கையளிக்கப்பட்டதுடன் இவ்விருதானது டாக்டர் வஜிர சித்ரசேனா அவர்களுக்காக இந்திய ஜனாதிபதி அவர்களால் 2020 ஆம் ஆண்டுக்கான விருதுகளுடன் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2. புதுடில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் 2021 நவம்பர் 08 ஆம் திகதி நடைபெற்ற பத்ம விருதுகள் வழங்கும் சிறப்பு நிகழ்வில் இந்திய துணை ஜனாதிபதி, இந்திய பிரதமர் மற்றும் ஏனைய பிரமுகர்களின் பிரசன்னத்துக்கு மத்தியில் 2020 ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் இந்திய ஜனாதிபதி அவர்களால் வழங்கப்பட்டமை நினைவில் கொள்ளப்படவேண்டியதொன்றாகும். இலங்கையை சேர்ந்த இரு பிரமுகர்களான டாக்டர் வஜிர சித்ரசேனா மற்றும் பேராசிரியர் (மறைந்த) இந்திரா தசநாயக்கே ஆகியோருக்கும் நடனம், இலக்கியம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் முறையே வழங்கியிருந்த பங்களிப்புக்காக பத்மஶ்ரீ விருது வழங்கப்பட்டிருந்தது.

3. டாக்டர் வஜிர சித்ரசேனா அவர்கள் பிரபலமான பாரம்பரிய நடனக் கலைஞரும், குருவும், நடன நெறியாள்கையாளருமாவார்.

அவரது சாதனைகளுக்கு கௌரவமளிக்கும் வகையில் ஏனைய பல விருதுகளுடன் இலங்கையில் உயர்வான தேசிய விருதுகளில் ஒன்றான தேசபந்து விருது அவருக்கு வழங்கப்பட்டது. இந்நிலையில் குறிப்பாக, கண்டிய நடனத்துடன் ஒடிசி நடனத்தை கலந்து மேற்கொண்ட படைப்புக்கள் மற்றும் நடனத்தை மேம்படுத்தும் பணிகள் ஊடாக இந்திய இலங்கை உறவை வலுவாக்கும்வகையிலான அவரது பங்களிப்புக்காக டாக்டர் வஜிர சித்ரசேனா அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது. டாக்டர் வஜிர சித்ரசேனா அவர்கள் இவ்விருதினைப்பெற்றுக்கொள்வதற்காக இந்தியாவுக்கு பயணிக்க முடியாதநிலை இருந்த காரணத்தினால் கொழும்பில் இந்த விருதினை கையளிக்கும் நிகழ்வினை இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்தது.

4. பத்மஸ்ரீ விருதினைப் பெற்றுக்கொண்ட மற்றொருவரான மறைந்த பேராசிரியர் இந்திரா தசநாயக்கே அவர்கள் களனிய பல்கலைக் கழகத்தின் பிரபலமான இந்தி பேராசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் பிறந்தமை காரணமாக அவர் இந்தியாவுடன் மிகவும் நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தார் அத்துடன் லக்னோ பல்கலைக்கழகத்தின் பழைய மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரது மகளான திருமதி வத்சலா தசநாயக்கே இஷ்தவீர அவர்கள் புதுடில்லியில் இந்திய ஜனாதிபதி அவர்களிடமிருந்து பத்மஸ்ரீ விருதினைப் பெற்றுக்கொண்டிருந்தார்.

5. இந்தியாவின் உயர்ந்த குடியியல் விருதுகளில் ஒன்றான பத்ம விருதுகள் ஒவ்வொரு வருடமும் குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்பட்டுவருகின்றன. பொதுச்சேவை அம்சமொன்றின் ஈடுபாட்டினைக் கொண்டிருக்கும் துறைகள் அல்லது செயற்பாடுகள் உள்ளடங்கிய சகல துறைகளிலுமான சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்மஸ்ரீ ஆகிய மூன்று வகைகளில் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்வருடத்துக்கான பத்ம விருதுகள் அடிமட்ட சாதனையாளர்களின் திறமைகள் மற்றும் சாதனைகளை போற்றுவதாக காணப்படும் நிலையில் அவை “மக்களின் பத்ம” விருதுகள் என மெச்சப்படுகின்றன.

6. டாக்டர் வஜிர சித்ரசேனா மற்றும் மறைந்த பேராசிரியர் இந்திரா தசநாயக்கே ஆகியோரின் தனிப்பட்ட சாதனைகளை அங்கீகரிப்பதனூடாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நெருக்கமான கலாசார உறவுகளை இந்திய அரசாங்கம் சான்றுபகர்கிறது. டாக்டர் வஜிர சித்ரசேனா மற்றும் பேராசிரியர் தசநாயக்கே ஆகியோரின் உயர்வான இப்பங்களிப்புக்கள், இலங்கை -இந்தியா இடையிலான மக்கள் - மக்கள் உறவினை மேலும் வலுவாக்குவதற்கான முக்கிய ஆதாரமாக இருந்து வருகின்றன. இலங்கையின் மிகவும் பிரபலமான இசை விற்பன்னரான திரு, டபிள்யூ.டி, அமரதேவா அவர்களுக்கு 2002ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**********

கொழும்பு
17 நவம்பர் 2021